(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 296.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 ஓகத்து 08, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2927/ '12

1.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கல்வி ஆணைக்குழுவின் தற்போதைய செயலாளரின் பெயர், முகவரி, பிறந்த திகதி மற்றும் கல்வித் தகைமைகள் யாவை;

(ii) மேற்படி நபர் இதற்கு முன்னர் வகித்த பதவிகள் மற்றும் ஏற்புடைய நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி உத்தியோகத்தர் இதற்கு முன்னர் பதவி வகித்த நிறுவனங்களில் நிதி மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளாரா;

(iv) அவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ளாரெனில், அத்தகைய ஒரு நபர் தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2938/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வான் படையிலிருந்து பல படைவீரர்கள் தலைமறைவாகியுள்ளனர் என அறிக்கையிடப்பட்டிருப்பது ஏன் என்பதையும்;

(ii) அவ்வாறு தலைமறைவாகியுள்ள படைவீரர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா அல்லது அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கின்றதா அல்லது அவர்களின் குற்றப்பணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்;

(iii) அவ்வாறு மன்னிப்பு வழங்கப்படாவிடின், சட்ட ரீதியான அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், சட்ட ரீதியாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தலைமறைவாகியுள்ள படை வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இலங்கை வான்வடையைச் சேர்ந்த ஆளணியினர் படை நடவடிக்கையின் போது காணாமற்போனமையால் அல்லது தலைமறைவாகியமையால் மீதப்படுத்தப்பட்டுள்ள பணத்தொகையையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3578/ '13

3.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய வங்கியின் தற்போதைய வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குத் தொகை எவ்வளவு;

(ii) தற்போதைய தலைக்குரிய படுகடன் தொகை எவ்வளவு;

(iii) மொத்த படுகடன் சுமை எவ்வளவு;

(iv) பொதுப் படுகடன் சுமை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2928/ '12

4.

கௌரவ புத்திக பத்திரண,— சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் கொழும்பு அலுவலகத்தை பேணிவருவதன் நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி அலுவலக கட்டிடத்துக்கு மாதாந்தம் செலுத்தப்படும் வாடகை யாது;

(iii) கொழும்பில் அமைந்துள்ள மேற்படி அலுவலகத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவர்களது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், தொலைபேசிக் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள் ஆகியவற்றை செலுத்துவதற்காக மாதாந்தம் செலவாகும் பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தினால் கடந்த ஐந்து வருட காலத்தினுள் ஈட்டப்பட்ட செஸ் வரி வருமானம் வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) செஸ் வரியை திரட்டுவதற்கு பொதுத் திறைசேரியின் அனுமதி கிடைத்துள்ளதா;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட செஸ் வரி வருமானத்தில் ஆராய்ச்சி நடவடிக்கை களுக்காக வருடாந்தம் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2939/ '12

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற்படையிலிருந்து பல படைவீரர்கள் தலைமறைவாகியுள்ளனர் என அறிக்கையிடப்பட்டிருப்பது ஏன் என்பதையும்;

(ii) இலங்கை கடற்படையின் தலைமறைவாகியுள்ள படைவீரர்களுக்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா அல்லது அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டிருகின்றதா அல்லது அவர்களின் குற்றப்பணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்;

(iii) மன்னிப்பு வழங்கப்படாவிடின் சட்டரீதியான அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டிருக்கின்றனவா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், சட்டரீதியாக குற்றச்சாட்டப்பட்டிருக்கும் தலைமறைவாகியுள்ள படைவீரர்களின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இலங்கை கடற்படையைச் சேர்ந்த ஆளணியினர் படை நடவடிக்கையின் போது காணாமற்போனமையால் அல்லது தலைமறைவாகியமையால் மீதப்படுத்தப் பட்டுள்ள பணத்தொகையையும் அவர் கூறுவரா?

(இ) இன்றேல் ஏன்?

3579/ '13

6.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர்களுக்கு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பணிக்கொடை செலுத்தப்படவில்லையென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) குறித்த ஆண்டு தொடக்கம் பணிக்கொடை செலுத்த வேண்டியுள்ள இ.போ.ச ஊழியர்களின் பெயர்ப் பட்டியலொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேலே பெயர் குறிப்பிட்டுள்ள மொத்த ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டியுள்ள பணிக்கொடைத் தொகையின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(iv) இவர்களுக்கு பணிக்கொடையைச் செலுத்த நடவடிக்கை எடுக்கும் விதத்தை திகதிகளுடன் கூடியதாக சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் பணிக்கொடையானது இவர்கள் ஓய்வுபெற்று எவ்வளவு காலத்தின் பின்னர் செலுத்தப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2929/ '12

7.

கௌரவ புத்திக பதிரண,— சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் ஆண்டில் கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் ஊழல், மோசடிகளை ஆராய்வதற்காக அமைச்சின் செயலாளரால் மூன்று பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மூன்று பேர் அடங்கிய குழுவின் விதப்புரைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி விதப்புரைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட மூன்று பேர் அடங்கிய குழுவிற்காக ஏற்கப்பட்ட செலவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவுக்கு கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் நிர்வாக சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3109/ '12

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டலுவல்கள் பாராளுமன்ற கண்காணிப்பு உறுப்பினர் குறித்த பதவிக்குரிய காலப்பகுதியில் மேற்கொண்ட வெளிநாட்டு கண்காணிப்புப் பயணங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர் நடைமுறை ரீதியாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சரா அல்லது பிரதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சரா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்புப் பாராளுமன்ற உறுப்பினரின் பயணங்கள் குறித்து ஒவ்வொரு பயணம் தொடர்பாகவும்,

(i) விமானப் பயணச் செலவினையும்;

(ii) ஹோட்டல் தங்குமிடச் செலவுகளையும், சென்ற நாட்டின் உள்ளக பயணம் செய்தமைக்கான செலவுகளையும் களியாட்டச் செலவுகளையும்;

(iii) கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினரின் செலவினங்களுக்காக வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரத்தினால் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளையும்;

(iv) வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அடைந்து கொண்ட நன்மைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற சேவை நிலையங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதி 2010 ஆம் ஆண்டிலிருந்து வங்கிகளிலிடப்படவில்லை என்பதையும்;

(ii) ஊழியர் சேமலாப நிதி வங்கிகளிலிடப்படாத காரணத்தினால் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வுபெறுகின்ற இ.போ.ச. ஊழியர்களுக்கு சேமலாப நிதியை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மேற்படி நிறுவனத்தின் சேவை நிலையங்கள் சேமலாப நிதியாக வங்கிகளிலிடப்பட வேண்டிய மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சேமலாப நிதியை வங்கிகளிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும் திகதி யாதென்பதையும்;

(iii) குறித்த பணத் தொகை உரிய திகதியில் வங்கிகளிலிடப்படாமையினால் மிகைக் கட்டணமாக செலுத்த வேண்டியுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி (திருத்தம்),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2013, ஓகத்து மாதம் 21ஆம் திகதி, புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மார்ச் 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

9.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

10.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

12.

அல் ஜாமியாத்துல் கஃஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

13.

பிலிப் குணவர்தன ஞாபகார்த்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.